காஞ்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு எழுச்சிமிகு வரவேற்பு!

காஞ்சிபுரம் – பச்சையப்பன் ஆடவர் கல்லூரி விளையாட்டுத் திடலில், நேற்று முன்தினம் காலை, 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை' தொடங்கி வைக்க வருகைத் தந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, விழாவில் பங்கேற்ற மகளிர், அகம் குளிர, மனம் மகிழ வரவேற்ற வாஞ்சை மிகு காட்சிகள்!



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், காஞ்சிபுரத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க கலைஞர் மகளிர் உரிமை தொகை வழங்கும் திட்டத்தினை துவக்கி வைத்ததையொட்டி அதன் தொடர்ச்சியாக தருமபுரி மற்றும் நல்லம்பள்ளி பகுதியில் 2000 பெண்களுக்கு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் உரிமை தொகையினை வழங்கினார்.உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி.சாந்தி,நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.டி.என்.வி.எஸ்.செந்தில்குமார்,மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ஆர்.ப்ரியா,சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஸ்வரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்,கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி,முன்னாள் அமைச்சர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர். பி.பழனியப்பன், மாநில கைம்பெண் வாரிய உறுப்பினர் ரேணுகா தேவி.உதவியாளர் தேவ் ஆனந்த்,மற்றும் இந்தியன் வங்கி அதிகாரிகள் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான நேற்று முன்தினம் (15.9.2023), ஈரோடு மாநகரத்திற்குட்பட்ட வீரப்பன்சத்திரத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் புதுப்பிக்கப்பட்ட திருவுருவச் சிலையை, முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். ஈரோடு மாவட்டத்திற்குட்பட்ட வீரப்பன்சத்திரம் பேரூராட்சியாக இருந்தபோது, பேரூராட்சி அலுவலகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலை, தந்தை பெரியார் அவர்கள் தலைமையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 26.10.1969 அன்று திறந்து வைக்கப்பட்டது. தற்போது வீரப்பன்சத்திரம் பேரூராட்சி, ஈரோடு மாநகரத்தோடு இணைக்கப்பட்டு, மாநகரத்தின் ஒரு பகுதியாக உள்ளது. அங்கே அமைக்கப்பட்டிருந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலை மற்றும் கட்டுமானம் பழுதடைந்த நிலையில் இருந்ததால், தற்போது பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலை மற்றும் சிலை அமைந்த இடம் புதுப்பிக்கப்பட்டு, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான (15.09.2023) அன்று கழகத் தலைவரும், முதலைமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களால் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது.

ஈரோடு வீரப்பன் சத்திரத்தில் பேரறிஞர் அண்ணா புதுப்பிக்கப்பட்ட திருவுருவச்சிலை!

முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார்!

சென்னை, செப்.17-

ஈரோடு மாநகரம், வீரப்பன்சத்திரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் புதுப்பிக்கப்பட்ட திருவுருவச் சிலையை கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்.

இது பற்றிய அரசின் செய்தி வெளியீடு வருமாறு:-

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான 15.9.2023 அன்று ஈரோடு மாநகரத்திற்குட்பட்ட வீரப்பன்சத்திரத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் புதுப்பிக்கப்பட்ட திருவுருவச் சிலையை முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

ஈரோடு மாவட்டத்திற்குட்பட்ட வீரப்பன் சத்திரம் பேரூராட்சியாக இருந்தபோது பேரூராட்சி அலுவலகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலை தந்தை பெரியார் அவர்கள் தலைமையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 26.10.1969 அன்று திறந்து வைக்கப்பட்டது.

தற்போது வீரப்பன்சத்திரம் பேரூராட்சி, ஈரோடு மாநகரத்தோடு இணைக்கப்பட்டு மாநகரத்தின் ஒரு பகுதியாக உள்ளது. அங்கே அமைக்கப்பட்டிருந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலை மற்றும் கட்டுமானம் பழுதடைந்த நிலையில் இருந்ததால், தற்போது பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலை மற்றும் அச்சிலை அமைந்த இடம் புதுபிக்கப்பட்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான 15.09.2023 அன்று கழகத் தலைவரும், முதலைமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களால் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் சு.முத்துசாமி, அந்தியூர் ப. செல்வராஜ் எம்.பி., மாவட்டச் செயலாளர் என். நல்லசிவம், ஏ.ஜி. வெங்கடாசலம் எம்.எல்.ஏ., மேயர் எஸ். நாகரத்தினம், துணை மேயர் வே. செல்வராஜ், மண்டல குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நாமக்கல் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!

அமைச்சர் மா.மதிவேந்தன் தொடங்கி வைத்தார்!

நாமக்கல் செப். 17 -

பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளில், அவர் பிறந்த காஞ்சிபுரத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையில், மாதந்தோறும் ரூ.1000/ வழங்கிடும் தமிழ் நாட்டின் வரலாற்றில் மிகப் பெரிய திட்டமான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்து, 13 மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை வழங்கினார். இந்த திட்டத்திற்காக இந்த ஆண்டுக்கு 7 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், சுஜிதா திருமண மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.கே.பி.சின்ராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.ராமலிங்கம், சேந்தமங்கலம் கு.பொன்னுசாமி, திருச்செங்கோடு ஈ.ஆர்.ஈஸ்வரன், நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு , குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000/ பெறுவதற்கான கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட வங்கி பற்று அட்டைகளை வழங்கினார்.

இவ்விழாவில் இராசிபுரம் நகர்மன்றத் தலைவர் முனைவர் கவிதா சங்கர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.இராமசுவாமி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பி.ஆர். சுந்தரம், மாவட்டஊராட்சி துணைத்தலைவர் செந்தில் குமார், ராசிபுரம் ஒன்றிய குழு தலைவர் கே.பி.ஜெகநாதன், நாமக்கல் வருவாய் அலுவலர் மருத்துவர் ரெ. சுமன்,மாவட்டஊரகவளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சிவக்குமார், நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் சரவணன், கூட்டுறவு சங்கங்கள் (இணைபதிவாளர்) த. செல்வகுமரன், மாவட்ட வழங்கல் அலுவலர் முத்துராமலிங்கம், பேரூராட்சி தலைவர்கள் ஆர்.எஸ்.எஸ். ராஜேஷ் (வெண்ணந்தூர்), ரா.போதம்மாள் (பட்டணம்), பொ.சுமதி (ஆர். புதுப்பட்டி), கொ.லோகாம்பாள் (சீராப்பள்ளி), இராசிபுரம் வட்டாட்சியர் சு.சரவணன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

உலக அரங்கில் உயர்ந்து நிற்கும் மகளிர் உரிமைத் திட்டம்!

முதல்வர் முக.ஸ்டாலினுக்கு திருவாரூர் மாவட்ட கூட்டத்தில் நன்றி

திருவாரூர்,செப்.17-

திருவாரூர் மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் அவைத்தலைவர் மாவட்ட க.தனராஜ் தலைமையில் திருவாரூரில் நடைபெற்றது. செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி கே.கலைவாணன் தீர்மானங்களை விளக்கி பேசினார் .கூட்டத்திற்கு மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி. பாலு, துணைத் தலைவர் சேகர் கலியபெருமாள், மாவட்ட துணைச் செயலாளர் எம்.எஸ். கார்த்தி, மு. வெங்கடேசன், சாந்தி பாஸ்கர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.எஸ். பாண்டியன், ஞானசேகரன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:-

பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்தநாளை முன்னிட்டு ஒன்றிய ,நகர, பேரூர் கழகங்கள் மற்றும் கிளை கழக, வார்டு கழகங்களில் அண்ணா திருவுருவப்படத்திற்கு மரியாதை செலுத்தி கழக கொடி ஏற்றுவது.

கழகத்தின் பெருநாளாம் முப்பெரும் விழா நடைபெறும் வேலூருக்கு கழகத் தலைவர் தளபதி இளைஞர், அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் வழிகாட்டுதல்களின்படி மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மாவட்டமான திருவாரூர் மாவட்டத்தில் இருந்து பெருந்திரளாக பங்கேற்பது.

நடைபெற இருக்கும் கூட்டுறவுச் சங்க தேர்தலில் நமது மாவட்டம் முழுவதும் விருப்பு வெறுப்புகள் இன்றி வேட்பாளர்களை தேர்ந்தெடுத்து, திராவிட நாயகர் தளபதி அவர்களின் பொற்கால ஆட்சியை மேலும் வலுப்படுத்தும் விதமாக கூட்டுறவு சங்கங்கள்தோறும் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சிகளின் வெற்றியை உறுதிப்படுத்துவது.

உலக அரங்கில் முதன் முறையாக பெண்களை பெருமைப்படுத்தும் விதமாக தி.மு.க. அரசின் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தை தமிழ்நாடு முழுவதும் வெற்றிகரமாக அமல் படுத்தி 100% தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றிய தமிழ்நாடு அரசின் முதல்வர் தளபதி அவர்களுக்கு நன்றியை தெரிவிப்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பெருநகர சென்னை மாநகராட்சி
மழைநீர் வடிகால் துறை

கலைஞர் 100 1924 - 2023

ம.நீ.வ.து.ந.க.எண்.0527 / 2023

மின்னணு ஒப்பந்தப்புள்ளி
இரண்டு உறை முறையில் கோரும் அறிவிப்பு

வ. எண்	பணியின் விவரம்	பணியின் மதிப்பு (With GST)	முன் வைப்புத் தொகை	ஒப்பந்ததரர் வகுப்பு
1	பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 1, 4, 6, 7, 8, 9, 10, 12 மற்றும் 13ல் உள்ள பல்வேறு இடங்களில் நீர்வழி கால்வாய் மேம்படுத்தும் பணிகள் (8 சிப்பங்கள்)	ரூ.123.61 முதல் ரூ.2221.82 இலட்சம்	பணியின் மதிப்பில் 1%	முதல் வகுப்பு

1. நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாள் **25.10.2023 மாலை 3.00 மணி**
2. ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பிக்க வேண்டிய வலைதளம் **https://tntenders.gov.in**
3. ஒப்பம் திறக்கப்படும் நாள் **26.10.2023 மற்றும் நேரம் மாலை 3.30 மணி**

செ.ம.தொ.இ / 5128 / ஒப்பந்தப்புள்ளி / 2023

கண்காணிப்பு பொறியாளர் / ம.நி.வ.து.